DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.326/2018**

Deposition of :PW -6

| | |
|---|---|
| Name : ஹரிகரன் | Caste: |
| Father's / Husband Name: | Calling: |
| Village : | Religion: |
| Taluk : | Age: |
| Date : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 8th day of April 2025

Accused present.

**முதல் விசாரணை :–**

நான் சின்னதிருப்பதில் வசிக்கிறேன். நான் துணி கடையில் வேலை செய்கிறேன். இறந்துபோன செல்வகுமார் எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி எனக்கு தெரியும். எதிரி எங்கள் கடைக்கு பக்கத்தில் பானை கடை வைத்துள்ளார். அழகாபுரத்தில் நான் வேலை செய்யும் துணிகடை உள்ளது. அந்த கடையின் உரிமையாளர் ஆஜர் எதிரி தான். எதிரி எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சாரதா காலேஸ் ரோட்டில் உள்ள டிஎன்ஏ என்ற துணி கடையில் விற்பனையாளராக பணியாற்றியதாகவும், அந்த கடையின் எதிரில் கலையரசி, வடிவேல் என்பர் மண் பாண்டங்கள் கடை வைத்திருந்தார்கள் என்றும் நான் வேலை செய்யும்

கடையின் கட்டிட உரிமையாளர் அவர்கள் தான் என்றும், கடந்த 23.12.2017 அன்று நான் கடையில் இருந்தபோது எனக்கு நன்றாக தெரிந்த அழகாபுரத்தை சேர்ந்த செல்வகுமார் என்பவர் மாலை 4 மணிஅளவில் எங்கள் கடைக்கு அருகிலுள்ள அவரது வீட்டிற்கு முன் ஆட்டோவை நிறுத்திவிட்டு காத்துகொண்டிருப்பதாகவும், அப்போது ஆஜர் எதிரியும், அவரது மனைவியும் வாய்தகராறு ஏற்பட்டு அது கைகலப்பாக மாறியதாகவும், அதை செல்வகுமார் ஓடி வந்து தடுத்ததாகவும், அப்போது ஆஜர் எதிரி கட்டையால் செல்வகுமாரின் தலையில் ஓங்கி அடித்தாகவும், சத்தம்போட்டு செல்வகுமார் கத்தியால் மீண்டும் அதே கட்டையால் மண்டையில் அடித்து உன்னை கொன்றுபோட்டுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், செல்வகுமாரின் மனைவி மற்றும் அவரது தம்பி ஆகியோர் ஓடி வந்து செல்வகுமாரை காப்பாற்றினார்கள் என்றும், அவர்களை செல்வகுமாரை சிகிச்சைக்ககாக மருத்துவமனை அழைத்து சென்றார்கள் என்றும், இது சம்மந்தமாக காவல்துறையினர் விசாரிக்கும்போது மேற்கண்ட உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு நான் பணி செய்யும் துணி கடையின் கட்டித்தின் உரிமையாளர் என்பதால் உண்மையை மறைத்துபொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.